FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073094

C 3/AC/2019.

1. District மாவட்டம் : Salem. PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 09.03.2019.

2. (i) Act சட்டம்: 7(a) and 7(A) of the Sections பிரிவுகள்: -
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: -
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.03.2019 Date to : நாள் வரை 09.03.2019.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.30hrs Time to : நேரம் வரை 05.15 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.03.2019 Time நேரம் : 1600hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.03.2019 Time நேரம் : 1600hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 5 Km Southeast.
Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி Sub. Registrar Office, Dadagapatti, Salem.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Srinivasan. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் T. Varatharajan.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு - (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் Deputy Inspection Cell officer, (g) Address : முகவரி Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts, Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) S. Vijayakumari, Sub. Registrar, Dadagapatti, Salem 2) N. Sabarirajan, Assistant. 3) J. Lakshmikanthan, Assistant 4) J. Muneer, Assistant 5) S. K. Kannan, Junior Assistant 6) S. Murugeswari, office Assistant o/o the Sub Registrar, Dadagapatti, Salem 7) Raja S/o R.V. Raja (Private Individual) 8) Chinraj S/o Anbalagan (Private individual) 9) Sekar (Document writer) 10) Selvaraj, Assistant of Sekar.

8. Reasons for delay in reporting by the complainant / informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……………………. Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 9.3.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 9/3/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
1800 hrs on 9-3-19.

Name: பெயர் S. Chandramouli
Rank: நிலை Additional Supdt of Police …………………No. எண் ……….
VAC, Salem.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2019 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) and 7 (A)ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

இன்று 09.03.2019ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு சேலம், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு. சீனிவாசன் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு. V.சீனிவாசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா சேலம் மாநகரம், சீலநாயக்கன்பட்டி, திருச்சி மெயின்ரோடு, RSV தோட்டம், தாதகாப்பட்டியில் கதவு எண்.9/60 – ல் இயங்கிவரும் தாதகாபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமதி. சு. விஜயகுமாரி, சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலகப் பணியாளர்கள் மேற்படி அலுவலகத்திற்கு பத்திரப்பதிவு, திருமணப்பதிவ், வில்லங்க சான்று நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் அந்த அலுவலகத்தில் செய்ய வேண்டிய இதர பணிகளுக்காக தங்களது அலுவலகம் வரும் பொது மக்களிடம் அரசுக்கு கட்ட வேண்டிய கட்டணம் போக கூடுதலாக, அதாவது தங்களது பதவிகளை தவறாகப் பயன்படுத்தி நேரடியாகவும், உரிமம் இல்லாமல் பத்திரம் எழுதி பதிவு செய்யும் புரோக்கர்கள் மூலமாகவும், உரிமம் பெற்ற பத்திர எழுத்தர்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், அதை அந்த அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு.கண்ணன் என்பவர் தற்காலிகமாக வாங்கி வைப்பதாகவும், அதிகமாக சேரும் தொகைகளை அவ்வப்போது அருகில் உள்ள திரு.சேகர் என்ற பதிவுபெற்ற பத்திர எழுத்தர் மற்றும் அவருடைய அலுவலகத்தில் பணிபுரியும் திரு.செல்வராஜ் என்பவரிடம் பாதுகாப்பிற்காக கொடுத்து வைப்பதாகவும் கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 8.3.2019 இரவு சுமார் 07.30 மணி முதல் 8/9.3.2019 காலை 05.15 மணி வரை நான் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து தாதகாப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த

சோதனையின்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட்ட கணினி அறைக்குள் கிழக்கில் வடக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் S.K. கண்ணன் அவர்களின் இருக்கை அருகில் ROSHAN என்ற பெரிய எழுத்துக்களும், R மற்றும் 5 என்ற சிறிய எழுத்துக்களும் வெள்ளை மற்றும் கருப்பு நிற எழுத்துக்களால் அச்சிடப்பட்டிருந்த, ஐந்து அறைகள் கொண்ட, மெரூன் மற்றும் கருப்பு கலர் பேக்கின் ஐந்தாவது அறையில் தனித்தனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த தொகைகள் (1) ரூ.4000, (2) ரூ.1500, (3) ரூ.3500, (4) ரூ.1000, (5) ரூ.1600, (6) ரூ.1500, (7) ரூ.1000, (8) ரூ.1500, (9) ரூ.2000, (10) ரூ.1900, (11) ரூ.2200 மற்றும் (12) ரூ.3000 ஆக மொத்தம் ரூ.24,700/– கைப்பற்றப்பட்டது. அந்த தொகைகள் குறித்து திரு.கண்ணன் அவர்களை கேட்டபோது, அவர் பத்திர எழுத்தர்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட நபர்கள் தங்கள் பத்திரங்களை பதிவு செய்ததற்காகவும், இதர வேலைகளுக்காகவும் இன்று மாலையில் தங்கள் அலுவலகம் வந்து அலுவலக செலவுகளுக்காக கொடுத்த பணங்கள் என்றும், அதை தான் தங்கள் அலுவலகத்தில் உள்ள அனைத்து அலுவலர்கள் சார்பில் வாங்கி வைத்திருப்பதாக தெரிவித்தார். எந்தெந்த பத்திர எழுத்தர்கள் எவ்வளவு தொகைகளை கொடுத்தார்கள் என்ற விபரத்தை அவரிடம் கேட்டபோது, அவர் அதை சரியாக நினைவுபடுத்தி சொல்லவில்லை. மேற்படி தொகைகள் அனைத்தும் இவ்வலுவலக அலுவலர்களுக்கு பத்திர எழுத்தர்கள் மற்றும் அது தொடர்புடைய நபர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட தொகை என்பதால் மேற்கண்ட தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொகை வைக்கப்பட்டிருந்த பேக்கும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த பேக்கினுள் காணப்பட்ட திரு.கண்ணன் அவர்கள் அவர் கைப்பட கணக்குகள் எழுதிய ஒரு துண்டுச்சீட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது அலுவலகத்திற்கு வந்த சேலம் தாதகாப்பட்டி சீரங்கன் தெருவைச் சேர்ந்த திரு. R.V. ராஜன் என்பவர் மகன் ராஜா அவர்களிடமிருந்து அவரது சட்டையின் வெளிப்புற மேல் பாக்கெட்டில் வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் 7 ம், ஐநூறு ரூபாய் நோட்டுகள் 5 ம் ஆக மொத்தம் பணம் ரூ.16,500/– ஆனது இந்த வாரம் முழுவதும், அவர்கள் அலுவலகத்தின் மூலம் பதிவு செய்த பத்திரங்கள் மற்றும் இதர வேலைகளுக்காக, சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்த தொகை என்று கூறியதால் அந்த

தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதேபோல அலுவலகம் வந்த மற்றொரு தனி நபர் சேலம் 4 ரோடு சாமிநாதபுரத்தைச் சேர்ந்த அன்பழகன் மகன் சின்ராஜ் அவர்கள் அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து ஐநூறு ரூபாய் நோட்டுகள் 5, இருநூறு ரூபாய் நோட்டுகள் 4, நூறு ரூபாய் நோட்டுகள் 17 ஆக மொத்தம் ரூ.5,000/–த்தை எடுத்து ஆஜர் செய்து அந்த தொகை இந்த வாரம் முழுக்க தான் இச்சார்பதிவாளர் அலுவலகத்தில் EC போடுவது, நகல் எடுத்துக் கொடுப்பது போன்ற பணிகளுக்காக இவ்வலுவலக பணியாளர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம்தான் ரூ.5,000/– என்று சொன்னதால் அந்த பணமும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின்போது அலுவலகத்திற்கு எதிரில் சற்று கிழக்கு பக்கமாக உள்ள கட்டிடத்தில் அலுவலகம் நடத்தி வரும் பத்திர எழுத்தர் திரு.சேகர் அவர்களை சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வரவழைத்து அவர் வைத்திருந்த தொகைகள் பற்றி விசாரணை செய்ததில் அவர் வைத்திருந்த தொகைகள் ரூ.2,30,000/– மற்றும் ரூ.95,000/– க்கு சரியான விளக்கம் தெரிவித்ததால் அந்த தொகைகள் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த தொகை ரூ.30,000/–க்கு அவர் எந்த விளக்கமும் சரியாக கொடுக்காததால் அந்த தொகையானது சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களால் கையூட்டாக பெறப்பட்டு பாதுகாப்பிற்காக திரு.சேகரிடம் ஒப்படைக்கப்பட்ட தொகையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சோதனையின்போது, பக்கம் 1 முதல் 234 வரை இருந்த இந்த அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கையின்போது இளநிலை உதவியாளர் திரு.கண்ணன், சார்பதிவாளர் திருமதி.விஜயகுமாரி, தனிநபர்கள் திரு.சின்ராஜ், திரு.ராஜா, ஆவண எழுத்தர் திரு.சேகர் ஆகியோர்களிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இதர விபரங்கள் இந்த திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் ந.க.எண். ஆ.கு.அ எண்.56/2019/ஆ1 நாள் 08.03.2019 மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்ட வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அவைகள் இந்த புகாருடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.76,200/– மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். இந்த நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய

தக்க புலன் விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxx. 09.03.2019 (V.Srinivasan).

Sir, Received the complaint at 16.00 hrs today on 9.3.2019 and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.3/AC/2019 u/s 7 (a) and 7 (A) of the Prevention of Corruption (Amendment) Act 2018 and I took up investigation. Sd xxxx 9.3.2019 S.CHANDRAMOULI, ADSP, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.V.Srinivasan Deputy Inspection Cell Officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(S.CHANDRAMOULI), 9/3/19
ADDL. SUPDT. OF POLICE
V&AC, SALEM.